254

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## கல்விப் பீடம்

## முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை

## கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி

## இறுதிப் பரீட்சை

**EPU 3331 – முன்பிள்ளைப் பருவக் கல்வி, ஆரம்பக் கல்வி என்பவற்றின் முன்னோக்கு**

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

திகதி : 07/01/2023 நேரம்: பி.ப 1.30 – பி.ப 3.30

## பகுதி I

1. 'பிள்ளை மையக் கல்வி' என்னும் எண்ணக்கருவை சுருக்கமாக விளக்குக.
2. "இன்றைக்கும் நாளைக்குமான கல்வி" பற்றிய எட்கர் பியோ(Edgar Frio) இன் கருத்து தொடர்பான UNESCO இனால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நான்கு கற்றல் இலக்குகள் எவை?
3. "பிள்ளை ஒரு சுயமாகக் கற்போன்" என்பதனை சுருக்கமாக விபரிக்க.
4. 'குடும்பம்' என்னும் பதத்தினை வரையறுக்க.
5. முன்பிள்ளைப் பருவக் கல்வியின் முக்கியத்துவத்தினை விபரிக்க.
6. "பல்பிரிவு அணுகுமுறை" என்பதனால் நீங்கள் கருதுவது யாது?
7. ஆரம்பக் கல்வியின் நோக்கங்களை விபரிக்குக.
8. 1972ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட ஆரம்பக் கலைத்திட்டத்தின் பிரதான நோக்கங்கள் எவை?

**(8x5 = 40 புள்ளிகள்)**

## பகுதி II

9.

i. முன்பிள்ளைப் பருவக் கல்வி தொடர்பாக ஜீன் பியாஜேயின் கருத்துக்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. இலங்கையில் பியாஜேயின் தத்துவார்த்தக் கருத்துக்கள் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றனவென ஆராய்க.

(12 புள்ளிகள்)

10.

i. "உலகைப்பற்றிய விழிப்புணர்வுக்கு சுற்றாடல்" என்பது தொடர்பாக ஆரம்பக் கல்வியில் பணியாற்றும் ஆசிரியரின் வகிபாகங்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. பின்வரும் கூற்றை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.
"ஆரம்பப் பிரிவில் மாணவருக்கு வழிகாட்டும் ஆசிரியர்களின் வகிபாங்கு தொடர்பாடல் மற்றும் ஆக்கச் செயற்பாடுகள் தொடர்பானது"

(10 புள்ளிகள்)

11.

i. செயற்பாட்டினூடாக கற்றல் என்பதை வகுப்பறையில் அமுலாக்க ஆரம்ப வகுப்பு ஆசிரியர் மேற்கொள்ளக்கூடிய உபாயங்கள் எவை? பொருத்தமான உதாரணம் தருக.

(10 புள்ளிகள்)

ii. செயற்பாட்டினூடாக கற்றலை மேற்கொள்ளும்போது ஆசிரியர் எதிர்நோக்கும் சவால்கள் ஐந்தினை (05) குறிப்பிடுக. இச்சவால்களை எதிர்கொள்வதற்கு உம்மால் முன்வைக்கக்கூடிய விதந்துரைகள் எவை?

(10 புள்ளிகள்)

12.

i. 1997 ஆம் ஆண்டு இலங்கையின் ஆரம்பக் கல்வியில் அமுல்படுத்தப்பட்ட பிரதான கலைத்திட்ட மாற்றம் எது?

(10 புள்ளிகள்)

ii. பின்வரும் அம்சங்கள் தொடர்பாக இலங்கையின் ஆரம்பக் கல்வியில் காணப்படுபவற்றை விளக்குக.
1) ஆரம்பக் கல்வியை அணுகல்
2) அடிப்படை தேவைகள்
3) கல்வி வளங்கள்

(10 புள்ளிகள்)

13.

i. அனைவருக்கும் கல்வி தொடர்பாக ஜொம்ரின் மாநாட்டில் (Jomtiem conference) மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் எவை?

(06 புள்ளிகள்)

ii. 'அனைவருக்கும் கல்வி' இனை உறுதிப்படுத்துவதற்காக இலங்கையில் 1990 இல் இருந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எவை?

(06 புள்ளிகள்)

iii. நீங்கள் மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளுள் ஏதாவது இரண்டினை (02) தெரிவு செய்து அவற்றினை சான்றுகளுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது